# பட்டமரம்

1. கவிஞர் தமிழ் ஒளி பற்றிக் குறிப்பு வரைக:

ஆசிரியர் குறிப்பு:

- புதுவையில் பிறந்தவர்.
- காலம்: கி.பி. 1924-1965
- பாரதியாரின் வழித்தோன்றல்.
- பாரதிதாசனின் மாணவர்.
- படைப்புகள்: நிலைபெற்ற சிலை, வீராயி, கவிஞனின் காதல், மே தினமே வருக, கண்ணப்பன் கிளிகள், குருவிப்பட்டி, தமிழர் சமுதாயம், மாதவி காவியம்.

2. பட்டமரத்தின் நிலை குறித்துக் கவிஞர் தமிழ் ஒளி கூறுவனவற்றை எழுதுக: (அல்லது) பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

பட்ட மரத்தின் வருத்தங்கள்:

- இலைகள் உதிர்ந்த மொட்டை மரமாக வெட்டப்படும் நாள் வருமென்று கவலை அடைந்தது.
- அனைத்து உயிரினமும் அமர நிழல் தரவும், வாசனை மிகுந்த மலர்களைத் தரவும், கூரையாய் அமைந்த இலை வெந்து கருகி இந்த நிறத்தைப் பெற்று காய்ந்து கருகியதால் வருந்தியது.
- பட்டை என்னும் தன் உடை இல்லாமல் போனதால் அழகு அனைத்தையும் இழந்து, கட்டையெனும் பெயர் கொண்டு வருந்தியது.
- காலவெள்ளத்தில் சீறிப்பாயும் புயலை எதிர்த்து தன் கைகளை நீட்டி ஒலமிடும் மனிதனைப்போல மரம் வருந்தியது.
- பாடும் பறவைகள் மரத்தில் அமர்ந்து பாடல் பாடியதையும், மூடிய பனித்திரையில் பூமிக்கு ஒரு மயக்கத்தை கொடுத்ததை நினைத்து வருந்தியது.
- சிறுவர்கள் தன் கிளை மீது அமர்ந்து குதிரை ஓட்டியவை அனைத்தும் வெறும் கதையாய், கனவாய் போனதை நினைத்து வருந்தியது.